[2011 ஆகஸ்ட் 10

18—

பேருந்து நிலையம்

*73—**திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, குறிச்சி நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குறிச்சி நகராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கும் செயல்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் எனக்கு கிணத்துக்கடவு தொகுதியிலே சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு அளித்து, மூன்றாவது முறையாக என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி நகராட்சிப் பகுதியானது சுமார் ஒன்றேகால் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்ற பெரிய நகராட்சிப் பகுதியாகும். குறிச்சி நகராட்சியானது, கோவை நகருக்கு மிக அருகில் உள்ள பகுதியாகும். எனவே பள்ளி, கல்லூரி, அலுவலக வேலைக்குச் செல்வோர் வசதிக்காக குறிச்சி நகராட்சிப் பகுதியில் வசித்து வருகிறார்கள். இவர்கள் 80 சதவிகிதம் பேருக்கு மேல் பேருந்து வசதியைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்கள் பொள்ளாச்சி—கோவை முக்கிய

2011 ஆகஸ்ட் 10]

சாலையிலுள்ள சுந்தராபுரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தில் ஏறி, இறங்கி வருகிறார்கள். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அத்துடன் அருகில் நான்கு முனை சாலை சந்திப்பில் சிக்னல் இருப்பதால் அடிக்கடி போக்குவரத்துத் தடையும் ஏற்படுகிறது. எனவே, இப்பகுதியில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்தால் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, இப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே பேருந்து நிலையம் அமைத்துக்கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி மூன்றாம் நிலை நகராட்சி ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு நகராட்சி ஆகும். இந்த நகராட்சி இப்பொழுது கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நகராட்சியில் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. அதோடு, நகரப் பேருந்துகளுக்கு இந்த நகராட்சியினுடைய அலுவலகத்தின் அருகில் 20 சென்ட் நிலம், இரயில்வே துறையினுடைய நிலத்தில் நகரப் பேருந்துகள் சென்று வருகின்றன. மேலும் உக்கடம் பகுதியில் இந்த நகராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உக்கடம் பகுதியில் நவீனப் பேருந்து நிலையம் இருக்கிறது. எனவே, இங்கு பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

முற்பகல் 10—35

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி நகராட்சி கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதாகும். இங்கே பேருந்து நிலையம் அமைத்தால் தெற்கேயிருந்து அதாவது மதுரை, திண்டுக்கல், பழனி, உடுமலை, கோவை போன்ற நகரங்களிலிருந்து வருகின்ற பேருந்துகளை இப்பேருந்து நிலையத்திலேயே நிறுத்திவிடலாம்.*

இதனால் போக்குவரத்து அதிகரித்து வருகின்ற இக்காலக்கட்டத்தில், தற்போது மட்டுமின்றி; எதிர்காலத்திலும் கோவை மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுவதைத் தடுக்க ஏதுவாக இருக்கும். எனவே, தொலைநோக்குப் பார்வையோடு இதைக் கவனத்தில் கொண்டு, பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி—கோவை முக்கியச் சாலையில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக, குறிச்சி ஆரம்பப் பள்ளிக்குப் பின்புறம் உள்ள இடம், பயன்பாடற்று காலியாக இருக்கிறது. அந்த நிலத்திலே பேருந்து நிலையம் அமைக்கலாம்; அல்லது பொள்ளாச்சி—கோவை முக்கிய சாலையில் சுந்தராபுரம் பகுதியிலே, தக்காளிச் சந்தைக்கு அருகில் காலியாக உள்ள உழவர் சந்தைக்கு, இப்போது செயல்பட்டு வருகின்ற தக்காளிச் சந்தையை இடம் மாற்றம் செய்து, அந்த இடத்திலே பேருந்து நிலையத்தை அமைத்தால், அங்கேயுள்ள மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சற்றுக் கூர்ந்து கவனித்து, அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள் கோரியதைக் கூர்ந்து கவனித்தேன். ஆகவே, அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கேட்ட இடத்தில், குறிச்சி நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பு செய்தமைக்கு, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும்*

2011 ஆகஸ்ட் 10]

கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றத்திலே, உறுப்பினர்கள் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலனை செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இந்தத் துறையில், உடனடியாக இங்கே உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, என்னுடைய சார்பிலும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சியில், ஏறக்குறைய 46 ஆண்டுக் காலமாக சிறிய பேருந்து நிலையமாக இருப்பதை ஒன்றுபட்ட தருமபுரி மாவட்டத்தினுடைய ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ப. டில்லி பாபு, இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசலாம்.*

திரு. ப. டில்லி பாபு: *பேருந்து நிலையம்தான்; அதனால் கேட்கிறேன். தங்களின் மூலமாக...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இதற்குத் தனிக் கேள்வி கேட்கவும்.*

வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.